# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS.33/2021. நாள்.20.12.2023**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டடது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | தர்மலிங்கம் | **வயது** | 67 |
| **த/பெ. க/பெ.** | மாரியப்பன் | **மதம்** | |
| **முகவரி** | திருவயலூர் | **தொழில்** | கூலி |

**<u>வ .சா.2 ஆஜர். 5,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வாதி பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பழனி, பூங்கொடி ஆகியோர்கள் பிரச்சனை செய்த காரணத்தால் அவர்கள் மீது வழக்கு போட்டுள்ளார். நானும் சரங்கபாணியும் சேர்ந்து தாவா சொத்தை வாதிக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் விற்பணை செய்தோம். இவ்வழக்கு தாவா சொத்தை 1 ம் பிரதிவாதியும் வாதியும் சேர்ந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினை கேட்டு வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதியும் வாதியும் ஆளுக்கு பாதியாக நிலத்தை ஓட்டி வருகிறார்கள் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்யகூடாது என பரிகாரம் கேட்கும் உரிமை வாதிக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் நிலைக்கதக்கதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.